3. கவன ஈர்ப்பு

தமிழ்நாட்டிலிருந்து காய்கறிகள் கேரள மாநிலத்திற்குத் தடையின்றி செல்லுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. எம். ஆறுமுகம், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

முற்பகல் 11-20

***திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலிருந்து காய்கறிகள் கேரள மாநிலத்திற்குத் தடையின்றிச் செல்ல வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழ்நாட்டிலிருந்து உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் திண்டுக்கல், கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலிருந்து கேரள மாநிலத்திற்குச்

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2015 செப்டம்பர் 4

சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், கேரள அரசு தமிழகத்திலிருந்து பெறப்படும் காய்கறி மற்றும் பழங்களில் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் இரசாயனங்களின் தாக்கம் இருப்பதாக உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவித்துள்ளது.

2. இது தொடர்பாக, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பயிரிடப்பட்ட காய்கறிகளை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆய்வகத்தில் ஆய்வு செய்த புள்ளிவிவரங்களை ஆராயும்பொழுது, 2008 முதல் 2013 வரை சோதனையிடப்பட்ட 1,065 காய்கறி மாதிரிகளில் பூச்சிக்கொல்லி மருந்து நஞ்சின் தாக்கம் 15 மாதிரிகளில் மட்டுமே உள்ளது என அறிய வந்துள்ளது.

3. இதைப்போன்று, கேரள மாநில அரசால் 2013-2014 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட 526 உணவுப் பொருட்களின் மாதிரிகளில் 9 மாதிரிகளில் மட்டுமே பூச்சிக்கொல்லி மருந்து நஞ்சின் தாக்கம் இருந்ததாகவும், ஆனால், கேரள மாநிலத்தில் அதிக பரப்பளவில் விளையும் ஏலக்காய் உள்ளிட்ட நறுமணப் பொருட்களின் 103 மாதிரிகளை ஆய்வு செய்ததில் 64 மாதிரிகளில் பூச்சிக்கொல்லி மருந்து நஞ்சின் தாக்கம் உள்ளதாகவும் இணையதளங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. புது டெல்லியில் இயங்கிவரும் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் மாதந்தோறும் காய்கறி மாதிரிகளை எடுத்துப் பரிசோதித்து வருகிறது. இதுவரை, பூச்சிக்கொல்லி மருந்து நஞ்சின் தாக்கம் தமிழக காய்கறிகளில் இருப்பதாக அறிக்கை ஏதுமில்லை. மேலும், 16-5-2015 முதல் 20-6-2015 வரை திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திலுள்ள பயிர் தொற்று நோய்த் தடுப்பு மையத்தில் பரிசோதனை செய்யப்பட்ட 84,522 கிலோ காய்கறிகளில் 20 கிலோ காய்கறிகளில் மட்டும் பூச்சி தாக்குதல் இருந்ததாக அறிக்கை உள்ளது. இதிலும் பூச்சிக்கொல்லி மருந்து நஞ்சின் தாக்கம் ஏதுமில்லை.

5. சில தினப் பத்திரிகைகளில் கேரள அரசு அலுவலர்கள், தமிழ்நாட்டில் உள்ள சில வேளாண் பண்ணைகளிலிருந்து காய்கறி மாதிரிகள் சேகரித்து ஆய்வுக்குட்படுத்தியதில், பூச்சிக்கொல்லி நஞ்சின் தாக்கம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக உள்ளது எனக் கண்டறியப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன.

2015 செப்டம்பர் 4] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

கேரள அரசின் அலுவலர்கள் தமிழகத்தில் நடத்திய கள ஆய்வு குறித்த விவரங்களைத் தமிழகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட கள அலுவலர்களுக்கோ, ஆய்வறிக்கை குறித்த விவரங்களைத் தமிழக அரசுக்கோ தெரிவிக்காதது முறையற்ற செயலாகும். கேரள அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக தமிழக அரசு மற்றும் அதன் கள அலுவலர்களின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.

6. எனினும், இதன் உண்மை நிலையைக் கண்டறிந்திடும் நோக்கில், தமிழக அரசின் சார்பில், தமிழகத்தில் அதிக அளவில் கேரளாவிற்கு காய்கறி வழங்கிடும் மாவட்டங்களான திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தருமபுரி, கன்னியாகுமரி, தேனி மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலிருந்து வேளாண் துறையினரால் காய்கறிகள் மற்றும் பழங்களின் 117 மாதிரிகள் எடுக்கப்பட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள உணவுப் பொருட்களில் நஞ்சினை ஆய்வு செய்யும் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு, கடந்த ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாறு ஆய்வு செய்யப்பட்டதில், சுமார் 5 மாதிரிகளில் மட்டுமே பூச்சிக்கொல்லி மருந்தின் தாக்கம் இருப்பது அறிய வந்துள்ளது.

7. மேலும், திண்டுக்கல், கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைத் துறையோடு தோட்டக்கலைத் துறையும் இணைந்து பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை செய்யும் நிலையங்களில் தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில், தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனையில் இல்லை என உறுதிசெய்யப்பட்டது. இந்தியாவிலேயே முதன்மையான பல்கலைக்கழகமாகத் திகழும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் உணவுப் பொருட்களில் நஞ்சினை ஆய்வு செய்யும் ஆய்வகத்தில் மேற்கொண்ட ஆய்வில், காய்கறிகளில் நஞ்சின் தாக்கம் இல்லை எனக் கண்டறியப்பட்டது. எனவே, ஆய்வறிக்கையில், கேரள அரசின் கூற்றில் உண்மையில்லை என நிரூபணம் ஆகியுள்ளது.

8. 8-6-2015 அன்று கேரள உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள், கேரளாவின் பழம் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யும் அனைவரும் உணவுப் பாதுகாப்பு உரிமத்தினை

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2015 செப்டம்பர் 4

15-6-2015 முதல் ஒரு மாதத்திற்குள் பெற வேண்டும் என்றும், கேரளாவிற்கு பழம் மற்றும் காய்கறிகளை அண்டை மாநிலங்களிலிருந்து கொண்டுவரும் அனைத்து வாகனங்களும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. 15-7-2015 முதல் உணவுப் பாதுகாப்பு உரிமம் பெறாமல் வாகனங்களில் கொண்டுவரப்படும் காய்கறி மற்றும் பழங்களுக்கு அனுமதி மறுக்கப்படுமென கேரள அரசு தணிக்கைச் சாவடிகளில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

9. எனினும், தற்போது கேரள மாநிலத்திற்கு காய்கறிகள் தங்குதடையின்றி தினசரி அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாவட்ட உணவுப் பொருள் பாதுகாப்புத் துறையினர் உரிய விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்கி மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை, தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு அனுப்பப்படும் காய்கறிகள் மற்றும் பழங்கள் குறைவு ஏதுமின்றி வழக்கம்போல் அனுப்பப்பட்டு வருகின்றன.

10. வேளாண்மைத் துறையானது நஞ்சில்லா உணவு உற்பத்திக்கு, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை கிராமங்களை உருவாக்குதல் என்ற திட்டத்தினை தமிழகத்தில் அறிமுகப்படுத்தி, நச்சுத் தன்மையற்ற பயிர்களைச் சாகுபடி செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

11. மேலும், நஞ்சில்லா பாதுகாப்பான உணவினை அளித்திடும் நோக்கில், உரிய பயிரில், சரியான தருணத்தில், பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்தினை சரியான அளவில், தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் இடும்போது பூச்சி நோயினை மிகச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம் என்ற 5 கொள்கைகள் விவசாயிகளுக்கு பேனர்கள் மற்றும் விளம்பரப் பலகைகள்மூலம் எடுத்துரைக்கப்பட்டு பாதுகாப்பான உணவினை உற்பத்தி செய்யவும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

12. தமிழகத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள் மற்றும் பழங்களில் அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கம் உள்ளதாக தேவையற்ற அச்சம் தரும் நடவடிக்கைகளை கேரள அரசு மேற்கொள்வது எந்தவிதத்திலும் சரியல்ல. இதர மாநிலங்களில் உற்பத்தியாகும் காய்கறி மற்றும் பழங்களைக் காட்டிலும், தமிழகத்தில் விளையும் காய்கறி மற்றும் பழங்கள் எவ்விதத்திலும்

2015 செப்டம்பர் 4] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

குறைந்தவையல்ல என்பதோடு, அனைத்துவிதத்திலும் பாதுகாப்பானவையே ஆகும். எனவே, கண்டறியப்படாத சந்தேகத்தைக் காரணங்காட்டி, தமிழகத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்லும் காய்கறி மற்றும் பழங்கள் குறித்து கேரள மாநிலத்து அலுவலர்கள் தேவையற்ற எச்சரிக்கைகள் விடுவதையும், கட்டுப்பாடுகளைத் திணிப்பதையும் நிறுத்த தமிழக அரசால் கேட்டுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இருப்பினும் எனது கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

காய்கறிகளில் பூச்சிக்கொல்லி மருந்தின் தாக்கம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருப்பதாகக் கூறி தமிழகத்திலிருந்து கொண்டுவரப்படும் காய்கறிகளை விற்பனை செய்ய கேரள வியாபாரிகளுக்கு அம்மாநில அரசு தடை விதித்திருந்தது. கேரளாவிற்கு கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்துதான் அதிக அளவு காய்கறிகள் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த நிலையில், அண்மையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த உணவுத் துறை அதிகாரிகள் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வந்தனர். அங்கு வயல்களில் பயிரிடப்படும் காய்கறிகளை ஆய்வு செய்தனர். அப்போது காய்கறிகளில் பூச்சிக்கொல்லி நஞ்சின் தாக்கம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். இதைத் தொடர்ந்து, தமிழகத்திலிருந்து கேரளாவிற்குச் செல்லும் சில வகை காய்கறிகளைக் கொள்முதல் செய்வதற்குக் கட்டுப்பாடுகளை கேரள அரசு விதித்திருந்தது. மேலும், அம்மாநில வியாபாரிகள் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்படும் காய்கறிகளை விற்க தற்காலிகத் தடை விதித்திருந்தது. இது தொடர்பாக தமிழக அரசின் உணவுப் பாதுகாப்புத் துறைக்கு கேரள அரசின் சார்பாகக் கடிதம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. நமது மாநிலத்தில் விளைவிக்கப்படும் காய்கறிகளில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கும் அதிகமான அளவு பூச்சிக்கொல்லி நஞ்சின் தாக்கம் இருக்கிறது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து தமிழக உணவுப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், அளவுக்கு அதிகமான பூச்சி மருந்து கலந்த காய்கறிகளை கேரள மக்கள் சாப்பிடட்டும் என்ற எண்ணத்தில் இங்கே விவசாயிகள் காய்கறிகளை உற்பத்தி செய்யவில்லை; தமிழக மக்களுக்கும் அதே விளைச்சல்தான் உணவாக உள்ளது; இப்படி ஓர் அபாய எச்சரிக்கை செய்வது போன்ற குற்றச்சாட்டை கேரள அரசு கூறியிருக்க வேண்டாம்; இதே காய்கறிகளைத்தான் அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டிலிருந்து அனுப்புகிறோம்; பொதுவாக, காய்கறி விளைச்சலின் ஆரம்பத்தில் சில வகை பூச்சிகளைத் தவிர்ப்பதற்காகவும், விளைந்த பிறகு மற்ற வகை பூச்சிகளைத் தடுப்பதற்கும் பூச்சிக்கொல்லிகளை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். ஆனாலும், அவை காய்கறிகளில் கலந்திருந்தாலும், குறிப்பிட்ட நேரத்திற்குமேல் வீரியத்துடன் இருப்பதில்லை. ஆனாலும், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதில் விவசாயிகளுக்கு அடிக்கடி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம் என்று அந்த மூத்த அதிகாரி கூறியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: ஒரே நிமிடம். கேரள அரசின் குற்றச்சாட்டுக்குப் பிறகு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினர், முள்ளங்கி, காலிஃப்ளவர், முட்டைகோஸ் உட்பட 4 வகை காய்கறிகளில் 51 மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்திருக்கின்றனர். அதில், 48 மாதிரிகளில் எந்தப் பூச்சிக்கொல்லியின் தாக்கமும் இருப்பது கண்டறியப்படவில்லை. 3 மாதிரிகளில் மட்டும் பூச்சிக்கொல்லி மருந்தின் தாக்கம் இருந்திருப்பதாக அந்த அதிகாரி அதில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: எனவே, யாரும் இதுகுறித்து பயப்படத் தேவையில்லை என்றும் அந்த அதிகாரி ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, காய்கறிகளை அழிக்கும் பூச்சிகளைக் கொன்று, அந்தப் பூச்சிகளைத் தான் சாப்பிட்டு அதன்மூலம்

2015 செப்டம்பர் 4] [திரு. வீ.பி. நாகைமாலி]

பயிர்களைப் பாதுகாக்கக்கூடிய நல்ல பூச்சிகளை, நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி, உற்பத்தி செய்ய வேண்டுமென்றும், விவசாயிகள் இயற்கை உரங்களைப் பயிர்களுக்குப் பயன்படுத்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

முற்பகல் 11-25

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காய்கறிகள் கேரள மாநிலத்திற்கு லாரிகள் மூலமாகவும், டெம்போ போன்ற வாகனங்கள் மூலமாகவும் எடுத்துச் செல்லப்படுகின்றன. கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலிருந்துதான் அதிகமான காய்கறிகள் கேரள மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காய்கறிகளில் நச்சுத் தன்மை அதிகம் இருப்பதாக, கேரள அரசால் சொல்லப்படுகின்றது. தமிழக விவசாயிகளின் மத்தியில் தேவையற்ற சந்தேகங்கள் மற்றும் விளைச்சலைக் குறைக்கும் நோக்கத்தோடு கேரள அரசு தொடர்ந்து இவ்வாறு கூறி வருகின்றது. கோவையிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காய்கறிகளில் பூச்சிக்கொல்லி மருந்தின் நச்சுத் தன்மையின் தாக்கம் இல்லையென்று அறிவிப்பு செய்திருந்தும்கூட, தொடர்ந்து கேரள அரசால் தவறான பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில், தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், சோதனைச் சாவடிகளில் தேவையற்ற முறையில் கேரள அரசு அதிகாரிகள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்தி, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை தாராளமாக கேரளாவிற்கு கொண்டுசெல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 செப்டம்பர் 4

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் விவர அறிக்கையிலே பதில் இருக்கின்றது என்றாலும், நான் இப்போது விவரமாக பதில் அளிக்கின்றேன்.

தமிழகத்திலிருந்து வரும் காய்கறிகளை கேரள அரசு தடை செய்யவில்லை. காய்கறிகளைக் கொண்டு வருபவர்கள் உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி உரிமம் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனையைத்தான் விதித்திருக்கிறார்கள்.

இந்த வருடம் மட்டும் 117 மாதிரிகள் நமது வேளாண்மைத் துறை ஆய்வகத்தின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, அதில் ஐந்து மாதிரிகள் மட்டும்தான் 1.4 சதவிகிதம் நச்சுத் தன்மை வாய்ந்ததாக இருந்தன. இந்திய அளவில் சராசரியாக 2.7 சதவிகிதம் வரை நச்சுத் தன்மை இருக்கலாம் என்று உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் ஒரு சதவிகிதம்தான் நச்சுத் தன்மை வாய்ந்ததாக உள்ளது. இதனால் உடலுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை.

கேரள அரசால் உற்பத்தி செய்யப்படுகின்ற ஏலக்காயின் 120 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில் 63 மாதிரிகளில் அதிகமான நச்சுத் தன்மை உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் விளைகின்ற, இங்கிருந்து கொண்டுச் செல்கின்ற காய்கறிகளில் ஒரு சதவிகிதம் நச்சுத் தன்மைதான் இருக்கின்றது. இந்திய அளவில் சராசரியாக நச்சுத் தன்மையின் சதவிகிதம் 2.7 ஆகும். கேரள அரசு இந்தப் பிரச்சினையை எழுப்பிய பிறகு, வேளாண்மைத் துறை ஆய்வகத்தின் மூலமாக 117 மாதிரிகளில், ஆய்வு செய்ததில் ஐந்தே, ஐந்து மாதிரிகளில்தான் 1.4 சதவிகிதம் நச்சுத் தன்மை, அதுவும் அனுமதிக்கப்பட்ட அளவில்தான் இருக்கின்றது. மேலும், நச்சுத் தன்மையே இல்லாத அளவில் காய்கறிகளைப் பயிரிடுவதற்குத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிறப்பாக திட்டங்களை வகுத்து, செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில் காய்கறி மகத்துவ மையம் ஒன்று 8.80 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, என்னென்ன பூச்சி மருந்துகளை அடிக்கவேண்டும், அதன் கால அளவு, அதன் வயது, அதனுடைய தன்மையைப் பொறுத்து அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. பூச்சிக்கொல்லி மருந்துகளை அழிக்க, பூச்சிகளை அழிக்கக்கூடிய பூச்சிகளை வளர்த்து, அதையும்

2015 செப்டம்பர் 4][திரு. ஆர். வைத்திலிங்கம்]
வேளாண்மைத் துறையின் மூலமாக பூச்சி மருந்துகளில் உள்ள நச்சுத் தன்மையை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அந்த அளவில் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலிருந்து மாம்பழம், வாழை, வெள்ளரி போன்ற காய்கறிகள் மற்றும் பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவற்றில் நச்சுத் தன்மை இருந்தால், வெளிநாட்டில் அதனை யாரும் வாங்கமாட்டார்கள். இந்தியாவிலேயே நச்சுத் தன்மை இல்லாத அளவிற்கு காய்கறிகளைப் பயிரிடுவதற்கு, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகவும், வேளாண்மைத் துறையினுடைய விரிவாக்க மையம் மற்றும் பயிற்சி மையத்தின் மூலமாகவும் விவசாயிகளுக்குப் பயிற்சியும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவிலே இருக்கின்ற 68 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களில் 15 ஆய்வகங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. மேலும், கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ஒருவர் Veg wash என்ற ஒரு திரவத்தை கண்டுபிடித்திருக்கின்றார். அந்தத் திரவத்தைக் கொண்டு காய்கறிகளைக் கழுவினால் நச்சுத் தன்மை போய்விடும் என்றும், அந்தத் திரவத்தை விற்பதற்காகவே கேரளாவில் இப்படி ஒரு புரளியைக் கிளப்புகிறார்கள் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. நல்ல தரமான காய்கறிகள், தினந்தோறும் 800 டன் அளவில், 250 லாரிகள் மூலமாக உரிமம் பெறப்பட்டு கொண்டுச் செல்லப்படுகின்றது. எந்தப் பதற்றமும் இல்லை. நீங்கள்தான் பதற்றப்படுகிறீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.